**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2013**

-----------------------------------------------------

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின்படி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேரத்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்றாகவும் இந்த அறிக்கை கருதப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)**

முழுயைாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதும் மீளாய்வாண்டில் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 6,836,600 பெறுமதியுள்ள கடிகாரங்கள் மற்றும் பதக்கங்கள் போன்ற நிலையான சொத்துக்கள் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3 இற்கு இணங்க மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் உபவேந்தர் மீள்மதிப்பீடு செயன்முறை செயற்படுத்தப்படுவதாகவும் காணி மற்றும் கட்டங்கள், அரைவாசி நிரந்தர கட்டமைப்பு ,மோட்டார் வாகனங்கள் மற்றும் கடிகாரங்களின் மதிப்பீடு உள்ளடங்களாக 80 சதவீதமான வேலை முடிவடைந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட 2005 தொடக்கம் 2009 வரையான ஆண்டுகள் தொடர்பிலான ரூபா 1,845,672 தொகையான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் பெறுமதி மற்றும் ரூபா 1,359,072 பெறுமதியான நாளேடுகள் மற்றும் சஞ்சிகைகளின் 87 விடயங்கள் 2014 செப்தெம்பர் 30 வரை வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், ரூபா 438,214 தொகையான அந்தப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளிற்கான பெறுமானத்தேய்வு வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 41,045,741 மற்றும் ரூபா 50,000,000 பெறுமதியான முறையே கட்டிட நிர்மாண வேலைகள் மற்றும் உள்ளக வீதி வேலைகள் வட மாகாண கட்டடங்கள் திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் பூர்த்தியாக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது மூலதனமாக்கப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 இலிருந்து தொங்கல் கணக்கிலுள்ள ரூபா 364,569 மீதியானது தெளிவாக்கவதற்கு நடவடிக்கை எடுக்காமல் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்த ரூபா 146,703 நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) ஆறு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்த நிலுவையாகவிருக்கின்ற மீதிகளில் ரூபா 2,562,402 தொகையான செலுத்த வேண்டியவைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் உபவேந்தர், நிதிக் குழு மற்றும் சபையின் அங்கீகாரத்துடன் வருமான கணக்கிற்கு ரூபா 861,137 செலுத்த வேண்டியவைகள் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரூபா 1,701,265 மீதி நடைமுறையிலிருக்கின்ற பாடநெறிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தார்.

(இ) பல்கலைக்கழக உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்படாத ரூபா 48,306 தொகையான சம்பளங்கள், வருமானத்திற்கு செலவு வைக்காமல் 01 - 02 ஆண்டுகள் வீச்செல்லைகொண்ட காலமாக செலுத்த வேண்டியவையாக இருந்தன.

(ஈ) கட்டிடங்கள் திணைக்களம் (மத்திய) ,இலங்கை மின்சார சபை, பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் புத்தகங்கள் சஞ்சிகைகள் இறக்குமதிக்கான வழங்குனர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு சம்பள முற்பணமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் உள்ளடங்களாக பலவேறு தரப்பினரிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 208,692,479 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்களில் ரூபா 163,555 ஆன தொகை 10 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் 52 உத்தியோகத்தரிடமிருந்து வாடகையாக பெறவேண்டிய ரூபா 41,250 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 27 அலுவலகர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 430,272 கூட்டுமொத்தத் தொகையான கடன் தவணைக்கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு மாதமும் குறித்தத அலுவலகர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஒரு உத்தியோகத்தரிடமிருந்து (வவுனியா வளாகம்) அறவிட வேண்டிய ரூபா 53,055 ஆன இடர்கடன் மீதி, ரூபா 10,802 ஆன மோட்டார் சைக்கிள் கடன் மீதி மற்றும் ரூபா 18,000 ஆன கணனி கடன் மீதி என்பன 12 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடாமல் நிலுவையாக இருந்தன.

(ஏ) புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை கொள்வனவின் சாத்தியத்தன்மைக்கான முறையான மதிப்பீடுகள் இல்லாமல் 2013 திசெம்பர் 30 இல் ரூபா 10,980,784 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால், கட்டளையிடப்பட்ட விடயங்களின் வழங்கல் கணிசமான காலத்தால் தாமதமடைந்திருந்தது.

(ஐ) கட்டிடங்கள் திணைக்களத்திற்கு (மத்திய) செலுத்தப்பட்ட ரூபா 650,886 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்களின் மீதிகள கணக்காய்வு பரீட்சிப்பு திகதியான 2014 மே 31 வரை˙ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பலசரக்கு விடயங்கள் மற்றும் எழுதுபொருள்களை கொள்வனவு செய்வதற்காக 2006 இல் உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,121,194 தீர்க்கப்படாத முற்பணங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்குகளில் உள்ளடக்கியிருந்த ரூபா 7,544,894,425 கூட்டுமொத்தத் தொகையான ஏழு இருப்பு விடயங்களின் உள்ளதன்மையை நிரூபிப்பதற்கு வருடாந்த மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

(ஆ) நன்கொடைகள், வாடகை கொடுப்பனவுகள், நட்டங்கள் மற்றும் சேதங்கள், விபத்துக்கள், பீட சபைகளால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், செலுத்தப்பட்ட ஆராய்ச்சிப் படிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்திறனாக நடாத்துதல் பேன்றன சம்பந்தமான தகவல்களின் உண்மைத்தன்மையை பின்வரும் சான்றுகளை சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

- வெளிநாடுகள்/ தூதரகங்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் மீதான விரிவான அறிக்கைகள்
- வாடகையில் எடுக்கப்பட்ட கட்டிடங்களிற்கான மதிப்பீட்டு அறிக்கை பல்கலைக்கழக செனற் சபையின் கூட்டக் குறிப்புகள்
- விபத்துக்கள் மற்றும் நட்டங்களின் அறிக்கைகள்
- முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தால் நடாத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்
- கல்விசார் உத்தியோகத்தர்களால் பூர்த்திசெய்யப்பட்ட ஆராய்ச்சியின் விபரங்கள்

**2.2.5 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பொது முயற்சிகள் மற்றும் தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 06 ஆந் திகதிய பிஈ/01/174/119பீ ஆம் இலக்க கடிதம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 மே 23 ஆந் திகதிய 8/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச அலுவலகர்களுக்கான மொழித் தேர்ச்சிக்காக செலுத்தவேண்டிய படிகள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைக்கு விரிவாக்கப்படமாட்டாது. எனினும், மொழித் தேர்ச்சி படியாக 57 கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு ரூபா 397,807 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) அதிகாரச்சட்டங்கள் | |
| (i) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 109 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் வர்த்தமாணியில் 2014 செப்தெம்பர் 30 வரை பிரசுரிக்கப்படவில்லை. |
| (ii) 2008 சனவரி 01 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரிவு 3 இன் கீழ் கட்டளையிப்பட்ட 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை அதிகாரச்சட்டம், (விசேட ஏற்பாடு) | 2013 பெப்ரவரி தொடக்கம் திசெம்பர் வரையான மாதங்களிற்கான 40 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் முத்திரை தீர்வைகள் கழிக்கப்பட்டு வேண்டப்பட்டவாறு உள்நாட்டு இறை வரித் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை என வெளிப்பட்டது. |
| (ஆ) பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவை | |
| (i) அத்தியாயம் XXII இன் 11.1 ஆம் பிரிவு | ரூபா 1,572,450 மோசடி கொடுப்பனவு தொடர்பில் ஒழுக்காற்று செயற்பாடு மீதான நடவடிக்கை விசாரணை குழு நியமிக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு பின்னரும் கூட தொடங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXVI இன் 2, 3, 4 ஆம் பிரிவுகள் | வெளியீடுகள் மற்றும் புத்தகங்களின் இருப்பு வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் XXVII இன் 3.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் வருகைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி 135(4) | கணக்கீட்டு உத்தியோகத்தரால் செயற்பாடுகளின் வருடாந்த கையளிப்பு தொடர்பான விபரங்கள் திருத்தப்பட்ட பட்டோலைகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. |
| (iv) நி.பி 272(1) | செலுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவைகள் சம்பந்தப்பட்ட மாதத்தின் முடிவிலிருந்து குறைந்தது 06 கிழமைகளிற்கு பிந்தாமல் |

| | |
|---|---|
| | மாதாந்தம் கணக்காய்விற்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி. 1645 | அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதற்கான அடுத்துவரும் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய நிறுவனத்தின் தலைவர் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒவ்வொரு வாகனத்தினதும் ஓடிய பிரயாணத்தின் மாதாந்தப் பொழிப்பு மற்றும் ஒவ்வொரு வாகனத்தினதும் நாளாந்த ஓட்ட அட்டவணை வாகனங்களிற்கு பொறுப்புடைய உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 யூலை மாதத்திற்காக மாத்திரம் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

**(ஈ) சுற்றறிக்கை ஏற்பாடுகள்**

| | |
|---|---|
| (i) 1980 பெப்ரவரி 25 ஆந் திகதிய 63 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | பாதீடிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கு இடையில் வித்தியாசங்கள் காணப்படுகின்ற அறிக்கையும் அந்த முரண்களிற்கான காரணங்களும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக 12 வாகனங்கள் தொடர்பில் இந்நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் போதான பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 869,160,000 ஆன அரசாங்க மானியத்தை கணக்கிலெடுப்பதற்கு முன்னரான ரூபா 969,943,982 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடப்படும் போது ரூபா 1,037,920,000 ஆன அரசாங்க மானியத்தை கணக்கிலெடுப்பதற்கு முன்னரான ரூபா 1,157,048,668 ஆன பற்றாக்குறையில் விளைவித்திருந்தது. ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 16,793,288 ஆன மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படும் போது மீளாய்வாண்டின் போது ஒப்பந்த சேவையிலுள்ள ஆளணி வேதனங்கள், பெறுமானத்தேய்வு கட்டணங்கள் மற்றும் காலக்கழிவு செலவுகள், மற்றும் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் என்பன அதிகரித்தமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக பங்களித்திருந்துது.

#### 3.1.1. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இருக்கின்ற நேரடி தொலைபேசி இணைப்புகளைப் பயன்படுத்துவதைக் குறைப்பதன் மூலம் உத்தியோக பூர்வ தொலைபேசி கட்டணங்களை குறைக்கும் நோக்கில் 2011 சனவரி மாதத்தில் பல்கலைக்கழகத்தினருக்கு உள்ளக தொலைபேசி வசதிகள் பொருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான தொலைபேசிக் கட்டணங்கள் ஒரே சமயத்தில் உள்ளக இணைப்புக்கள் ஊடாக வெளிச் செல்லும் வசதிகள் இருந்தமை காரணமாக முன்னைய ஆண்டிற்கான கட்டணங்களுடன் ஒப்பிடும்போது ரூபா 4,697,076 ஆல் அல்லது 32 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) பல்கலைக்கழகமானது யாழ்ப்பாணத்தில் சொந்த விருந்தினர் விடுதி வைத்திருந்த போதிலும் அந்த விருந்தினர் விடுதியில் பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் பிரதிப் பதிவாளர் (மூலதன வேலைகள்) 2009 ஏப்ரலிருந்து எவ்வித வாடகையும் செலுத்தாமல் குடியிருந்தமையால் பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்த அலுவலர்களுக்கு தனியார் விடுதியில் தங்குமிட வசதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்த அலுவலர்களுக்கு தங்குமிட வசதி வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தால் ரூபா 825,125 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

(அ) **பரீட்சைகளும் பெறுபேறுகளும்**

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் கீழும் நடாத்தப்பட்ட பல்வேறு பாடநெறிகளிற்கான பரீட்சைகள் நடாத்துவதற்கான திகதிகள் மற்றும் அந்த பரீட்சைகளின் பெறுபேறுகளை விடுவிப்பதற்கான இலக்குத் திகதிகள் என்பன நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் விவசாயம், கலை, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தகம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பீடங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சைகள் பிரிவு என்பவற்றால் பரீட்சை திகதியிலிருந்து பரீட்சைப் பெறுபேறுகளை விடுவிப்பதில் 01 தொடக்கம் 22 மாதங்கள் வீச்செல்லை கொண்ட கருத்திற்கொள்ள வேண்டிய காலதாமதங்கள் இருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. 1995 யூலை 14 ஆந்திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின்படி, பரீட்சைகளின் பின்னர் மூன்று மாதங்களிற்குள் பரீட்சைப் பெறுபேறுகள் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், பரீட்சைப் பெறுபேறுகள் மேற்குறிப்பிடப்பட்டவாறு குறிப்பிடத்தக்களவு காலம் தாமதப்பட்டிருந்தன, அதனால் மாணவர்கள் உரியகாலத்தில் அவர்களுடைய வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை பெறுவது தடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) **ஒரு மாணவனுக்கான கிரயம்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 5,723 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட மொத்த செலவினம் ரூபா 815,147,732 ஆகவும் அத்தகையவாறு கீழே தரப்பட்ட விபரங்களின்படி ஆண்டிற்கான ஒரு மாணவருக்கான சராசரிக் கிரயம் ரூபா 142,434 ஆகவும் இருந்தது.

| | கலைகள் | விவசாயம் | பட்டப்படிப்பு கல்வி | மருத்துவம் | முகாதைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தகம் | விஞ்ஞானம் | வவுனியா வளாக பிரயோக விஞ்ஞானம் | வவுனியா வளாக முகாதைத்துவ கற்கைகள | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த கிரயம் (ரூபா) | 266,922,273 | 69,307,096 | 3,897,490 | 141,471,824 | 59,832,990 | 185,859,387 | 50,672,015 | 37,184,657 | 815,147,732 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 2,917 | 198 | 208 | 498 | 894 | 662 | 214 | 132 | 5,723 |
| ஒரு மாணவனுக்கான கிரயம் | 91,506 | 350,036 | 18,738 | 284,080 | 66,927 | 280,754 | 236,785 | 281,702 | 142,434 |

விவசாய பீடத்தில் ரூபா 350,036 தொகையான ஒரு மாணவனுக்கான உயர்ந்த கிரயம் பதிவு செய்யப்பட்டிருந்த அதேநேரம் பட்டப்படிப்பு கல்விப் பீடத்தில் ரூபா 18,738 தொகையான ஒரு மாணவனுக்கான குறைந்த கிரயம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மஹாபொல மற்றும் உதவிப்பணம்

மீளாய்வாண்டின் போது மாணவர்களிற்கு ''மஹாபொல'' மற்றும் உதவிப்பணமாக 1950 மற்றும் 1900 மாணவர்களுக்கு முறையே ரூபா 26,404,250 மற்றும் ரூபா 38,355,400 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 ஆகஸ்ட் 11 கண்காய்வு திகதி வரை 580 மாணவர்களிற்கு மஹாபொலவாக ரூபா 1,282,400 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நூலக நிர்வாகம்

அ) நூலகத்திலிருந்து புத்தகங்கள் பெற்றிரந்த 13 விரிவுரையாளர்களால் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் 17 புத்தகங்கள் திருப்பப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், 1 தொடக்கம் 28 வரையான வீச்செல்லையிலான காலப்பகுதியில் வெளியிலிருக்கின்ற அந்த புத்தகங்களை திருப்பிப் பெறுவதற்கோ தண்டப்பணம் அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஆ) பல்கலைக்கழகமானது 2006 இலிருந்து வழங்குநர்களிடமிருந்து பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டிருக்காத ரூபா 1,992,508 பெறுமதியான 724 புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் நாளேடுகள் என்பவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.1 வருகைதரும் விரிவுரையாளர்கள்

நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு விரிவுரை மணித்தியாலங்களின் நிர்ணயித்த காலம் வருகைதரும் விரிவுரையாளர்களால் மேவப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால் வருகைதரும் விரிவுரையாளர்களால் பாடங்களின் முழுப் பாடத்திட்டமும் மேவப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் ஆராய்ச்சி படிகளின் கொடுப்பனவு

மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 3,243,572 மற்றும் ரூபா 52,799,328 தொகை ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் ஆராய்ச்சி படிகள் செலுத்தப்பட்டிருந்தது இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i) ஆராய்ச்சி மானியங்களிற்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.
ii) நிர்ணயித்த காலத்தினுள் உத்தியோகத்தர்கள் ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்த்திருக்கவில்லை.
iii) மானியங்களை பயன்படுத்துவதற்கான நியதி, நிபந்தனை மற்றும் பிரமாணங்கள் என்பன மானியங்கள் செலுத்தப்பட்ட அலுவலகர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.
iv) அலுவலகர்களால் ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான வேலைத் திட்டம் மற்றும் பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புலமைப்பரிசில்களில் சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் 148 விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் பூர்த்தியான பின்னர் கடமைகளை பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகமானது உடன்படிக்கைகளை மீறியதற்காக அந்த 148 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 82,334,517 கூட்டுமொத்தத் தொகைகள் அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கவில்லை .

(ஆ) உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2012 ஒக்தோபர் 15 இல் எழுதப்பட்ட 14 நிறுவனங்களிற்கு ரூபா 8,593,446 பெறுமதியான இருபத்தியிரண்டு காசோலைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், பின்னர் அக்காசோலைகள் நான்கு மாதத்திற்கு பின்னர் இரத்து செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பில் உபவேந்தர், குறிப்பிடுகையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியை பயன்படுத்துவதற்காக 2012.12.30 இல் காசோலைகள் வரையப்பட்டன என்றும் கட்டளைகள் மேற்கொள்ளப்பட்ட போது காசோலைகள் வரையப்பட்டன என்றும் நிர்ணயித்த காலப்பகுதியில் வழங்குநர் விடயங்களை வழங்காததால் காசோலைகள் முற்பணங்களை திருப்புவதற்காக இரத்து செய்யப்பட்டிருந்தது எனவும் குறிப்பிட்டார்.

(இ) 23 நிழற்பட பிரதி இயந்திரங்கள் சேவை உடன்படிக்கையில் தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 493,360 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்த காலத்திற்குள் சகல 23 நிழற்படபிரதி இயந்திரங்ளிற்காக ஒரு மாதத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் மீளாய்வாண்டின் போது 12 சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். எனினும்,07 சந்தர்ப்பங்களிற்கு 4 மாத்திரமே சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்விளைவால் அந்த கம்பனிக்கு ரூபா 246,680 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக் பதிவேடு தயாரித்தலிற்காக ரூபா 3,150,000 கிரயத்தில் வெளித்தரப்பு தனியார் கம்பனியொன்றிடமிருந்து சேவையை பெறுவதற்காக 2013 நவம்பர் 18 இல் ஒப்பந்த உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், வேலைகள் 2014 பெப்ரவரி 18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. இருந்தபோதிலும், 8 மாதங்ள் கடந்த பின்னரும் 2014 ஒக்தோபர் 30 வரையும் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2014 யூன் வரை 25 சதவீதமான வேலைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் நீடித்தலிற்கான முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXII இன் 11.1 ஆம் பிரிவின் பிரகாரம், விசாரணை அலுவலர்கள் 03 மாதத்திற்கினுள் விசாரணைகளை பூர்த்தி செய்ய வேண்டும் . ஒழுக்காற்று பின்ணணி மற்றும் மோசடியான நடவடிக்கைகளுக்காக இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களுக்கு எதிரான விசாரணைகளை நடாத்துவதற்கு 04 விசாரணை சபைகள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விசாரணை சபை குறிப்பிட்ட காலம் காலப்பகுதியினுள் அதனுடைய செயன்முறையை பூர்த்திசெய்திருக்கவில்லை. இதன்விளைவால் இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களுக்கு பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் முன் அங்கீகாரம் அதிகாரம் பெறப்படாமல் முழுச்சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பேராசிரியருக்கு வழங்கப்பட்ட இடைநிறுத்தல் பின்னர் மீளப்பெறப்பட்டிருந்ததுடன் முழுச்சம்பளத்துடன் வேலைக்கு திரும்பவும் சேருவதற்கு வேண்டப்பட்டிருந்தார் என மேலும் அவதானிக்கப்பட்டது.

### 4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ரூபா 1,572,450 கூட்டு மொத்த தொகையான 20 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் ஊடாக 2012 திசெம்பர் முதல் 2013 மார்ச் வரையான காலத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் மேற்குறிப்பிட்ட விடயங்களை பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததாக மோசடி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில், பல்கலைக்கழகமானது பொறுப்புடைய நபர்களிடமிருந்து கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த கொடுப்பனவுகள் நாட்குறிப்பு பதிவுகளால் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் தொங்கல் கணக்கு நட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் உள்ளக மற்றும் வெளிவாரி விசாரணை நடைமுறைகள் இந்த நட்டங்கள் அறவிடுவதன் நோக்கில் செயற்பாட்டில் உள்ளன.

### 4.4 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான பதவியணி நிலமை கீழே காட்டப்பட்டுள்ளன.

| உத்தியோகத்தரின் வகுதி | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| கல்விசார் | 497 | 367 | 130 | - |
| கல்விசார் உதவி | 58 | 31 | 27 | - |
| தற்காலிக கல்விசார் | 140 | 183 | - | 43 |

| | | | | |
|---|---|---|---|---|
| நிர்வாகம் | 686 | 561 | 125 | - |
| மொத்தம் | 1,381 | 1,142 | 282 | 43 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உத்தியோகத்தரின் ஆட்சேர்பிலுள்ள ஏற்பட்ட தாமதத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 282 வெற்றிடங்கள் நிலவியிருந்ததுடன் அதில் பல்கலைக்கழகத்திலுள்ள 07 பீடங்களில் பேராசிரியர்கள், இணைந்த பேராசிரியர்கள் போன்ற பிரதான கல்விசார் பதவிகளில் 130 வெற்றிடங்கள் உள்ளன. எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபனகோவையின் III ஆம் அத்தியாயத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட 1,142 உத்தியோகத்தர்களின் கல்வித் தகைமைகள் தொடர்பில் நேரடி சான்றுபடுத்தல் உரிய நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 20:16 ஆம் பந்தி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் வழங்கப்பட்ட 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதிய யூஜீசீ/எச்ஆர்/3/1/6 ஆம் இலக்க கடிதம் என்பவற்றில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளாமல் அனுதாப பின்னனியை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தரப்பினரிடமிருந்தான மேன்முறையீடுகளை கருத்திற்கொள்வதன் மூலம் இடைநிறுத்தப்பட்ட பதவியணியினரை மீளமர்த்துவதற்கான பல்கலைக்கழக சபைத் தீர்மானித்தது.

### 4.5 ஒப்பந்த நிர்வாகம்

(அ) முறையான அங்கீகாரம் இல்லாமல் வேலைப் பொறியியலாளரால் அளவீட்டுப் பட்டியல் (BOQ) அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன்விளைவால் பல்கலைக்கழகத்தின் மாணவர் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலையின் மீது மீளாய்வாண்டின் போது ஒப்பந்தக்காரருக்கு ரூபா 115,087 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் உடன்பட்டவாறு ஒப்பந்தக்காரரால் குழாயிடல் திருத்தங்கள், உள்ளக இலத்திரனியல் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கராஜ் நிர்மாணித்தல் தொடர்பில் வேண்டப்பட்ட அங்கீகாரம் இல்லாமல் ஒப்பந்தக்காரரால் ரூபா 228,374 பெறுமதியான வேலைகளின் மேலதிக விகித பட்டியல் மற்றும் நிலுவை கடன் விகித பட்டியல் நிறைவேற்றப்பட்டிருந்தது.

### 4.6 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கட்டிடங்கள், வளநபர்கள் மற்றும் ஏனைய சகல வசதிகள் என்பன பல்கலைக்கழகத்தில் கிடைக்கத்தக்கதாகவிருந்த போதிலும் சட்ட மாணவர்களிற்கான 4 ஆம் ஆண்டு கல்வி நிகழ்ச்சித்திட்டம் நடாத்துவதற்கு பல்கலைக்கழகத்தின் செனற் தீர்மானித்திருந்ததுடன், ஒரு மாதத்திற்கு ரூபா 100,000 வீத வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாடகை கட்டிடத்தில் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 வரை ரூபா 6,630,000 தொகை வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கல்விசார் உத்தியோகத்தர்களிற்கான வருகைப் பதிவேடு நீண்ட காலமாக பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட விடுமுறை மற்றும் செலுத்தப்பட்ட ரூபா 697,024,683 தொகையான சம்பளங்களின் உண்மைத்தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(iii) 2011 இல் விரல் அடையாள இயந்திரங்கள் பொருத்துவதென்று திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட 2010 பெப்ரவரி 15 ஆந் திகதிய 02/2010 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கையின்படி அது குறித்த நோக்கத்திற்காக வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பெறுமதி சேர் வரி கொடுப்பனவின் போது பெறுமதி சேர் வரி பதிவு இலக்கத்தின் தகுதி மற்றும் பெறுமதிசேர் வரி பட்டியலை பரீட்சிக்காமல் பொறியியல் பீடத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக பல்கலைக்கழகத்தால் ரூபா 424,175 கூட்டு மொத்த தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர், ஒப்பந்தகாரரால் செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி இலக்கம் செயலிழந்தது எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

**4.8 கொள்வனவு நடைமுறையிலுள்ள நலிவுகள்**

மீளாய்வாண்டின் போது அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், கடிகாரங்கள், தொலைபேசி பரிவர்த்தனைகள் மற்றும் காகிதாதிகள் என்பவற்றின் கொள்வனவிற்காக ரூபா 328,703,735 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதான கொள்வனவு திட்டத்தின் இல 07 முதல் இல. 13 வரை குறிப்பிடப்பட்ட விடயங்களிற்காக பூர்த்தியாக்கல் இலக்குத் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதான கொள்வனவு திட்டம் உயர் கல்வி அமைச்சு செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொள்வனவு வழிகாட்டலின் 4.2.2 ஆம் வழிகாட்டலின்படி, கொள்வனவு காலப் பட்டியல் தொடக்க புள்ளயிலிருந்து அதன் பூர்த்தியாக்கல் வரை ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் காலமுறைப்படியான வரிசை மற்றும் படிமுறைகளில் விவரிப்பதன் மூலம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கையின் கால அட்டவணை மற்றும் படிமுறைகள் என்பன பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 1,599,197 கூட்டுமொத்தத் தொகையான தட்டெழுத்து தாள், இலத்திரனியல் பொருட்கள், நூல் மற்றும் மின் விசிறி போன்ற வழங்கல் மற்றும் பராமரிப்பு

விடயங்கள் 01 முதல் 15 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலத்திற்காக பயன்படுத்தப்படாது பல்கலைக்கழகத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 69 மழைக்கவசங்களில் 65 மழைக்கவசங்கள் தொழிலாளர்களால் சேகரிக்கப்படவில்லை. இதன்விளைவால், மழைக்கவசங்கள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் பயனற்றதாக விடுவிக்கப்பட்டிருந்தது.

## 4.10 வாகன தொகுதி முகாமைத்துவம்

(அ) வாகன ஓட்ட அட்டவணையின் பேணுகை

- எரிபொருள் கட்டளை இலக்கம், எரிபொருள் பட்டியலின் இலக்கங்கள் என்பன வாகனங்களின் ஓட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.
- வாகனங்களின் ஓட்ட அட்டவணையின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தால் பயன்படுத்தப்பட்ட நான்கு வாகனங்கள் தொடர்பில் ரூபா 96,504 மேலதிக கொடுப்பனவு அவதானிக்கப்பட்டது.
- வாகனத்தின் ஓட்ட அட்டவணையில் பயணத்தின் நோக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனங்களை வாடகைக்கமர்த்தல்

மீளாய்வாண்டின் போது வாகனங்களை வாடகைக்கமர்த்தல் கட்டணமாக ரூபா 2,509,795 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகம் பல வாகனங்களை வைத்திருந்தபோதும் பல்கலைக்கழகத்தால் தொகுதி , பல வாகனங்கள் வாடகைக்கமர்த்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- வாகனங்களை வாடகைக்கமர்த்துவதற்காக கொள்வனவு நடைமுறை முறைப்படி பின்பற்றப்பட்டிருக்கவில்லை.
- மாவட்ட செயலாளரால் நிர்ணயிக்கப்பட்ட சிக்கனம் / அரசாங்க கட்டணத்தை கருத்திற்கொள்ளாமல் ஒரு கி.மீ ற்காக கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.
- போக்குவரத்து சேவையைப் பெறுவதற்காக பதிவு செய்யப்பட்ட போக்குவரத்து முகவர்களிடமிருந்து விலைகோரல் அழைக்கப்பட்டிருக்கவில்லை.
- வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களை பயன்படுத்திய அலுவலர்களால் மைலோ மீற்றர் வாசிப்பு மற்றும் பயணத்திற்கான காலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- வாகனங்களை ஒதுக்குவதற்கான பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

# 5. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகையும்

## 5.1 ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், 2014 செப்தெம்பர் 30 வரை 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கைகள் பாராளுமன்றத்தின் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

அரச நிதியின் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், பல்கலைக்கழகம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை தயாரித்திருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காயவு நிகழ்ச்சித்திட்டத்தின்படி, பின்வரும் கொடுக்கல் வாங்கல் பகுதிகள் உள்ளக கணக்காய்வு பிரிவால் முழுமையாக பரீட்சிக்கப்பட்டு/ மேவப்பட்டிருக்கவில்லை.

(அ) **மூலதன வேலை செயற்திட்டங்கள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் மீதான பிந்திய கணக்காய்வு**

இது தொடர்பில் உபவேந்தர், மூலதன வேலை செயற்திட்டங்கள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் மீதான பிந்திய கணக்காய்வு ஒப்பந்த நடைபெறும் வேலை பூர்த்தியாக்கப்படாமையால் முழுமையாக மேவ இயலாதிருந்தது. ஆகவே உள்ளகக் கணக்காய்வு ஒப்பந்த முகாமைத்துவத்தின் அரைவாசியை மேவியிருந்ததுடன் மீதி வேலைகள் நேரத்திற்கு நேரம் கணக்காய்வு செய்யப்பட்டு வருகின்றன என குறிப்பிட்டார்.

(ஆ) **பல்கலைக்கழகத்தின் கொள்வனவு**

இது தொடர்பில் உபவேந்தர், பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு தொடர்புடைய கொடுப்பனவு பற்றுச்சீட்டினை சரிபார்ப்பதன் மூலம் கொள்வனவு வேலைகள் உள்ளகக் கணக்காய்வால் கணக்காய்வு செய்யப்பட்டது. எதிர்காலத்தில் அதன் முழுமையாக பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## 5.4 பதிலளிக்கப்பட்டிருக்காத கணக்காய்வு ஐயவினாக்கள்

பல்கலைக்கழகமானது 2011 தொடக்கம் 2013 வரை விநியோகிக்கப்பட்ட 09 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | பதிலளிக்கப்பட்டிருக்காத கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2011 | 01 |
| 2012 | 01 |
| 2013 | 07 |
| | 09 |

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கும் இடையில் குறிப்பிடக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) நூலக நிர்வாகம்
(இ) களஞ்சிய நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்
(ஊ) கொள்வனவுகள்
(எ) மனிதவளங்கள் முகாமைத்துவம்
(ஏ) பாதீடு